# West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை

## கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு திட்டங்கள்



west sussex county council

இந்தத் தகவல்கள் கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு திட்டங்களைப் பற்றியதாகும். மேலும் இதில் சிறப்புக் கல்வித் தேவைகளின் அறிக்கைகள் பற்றிய விவரங்களும் உள்ளடங்கும்.

## கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு திட்டம் என்றால் என்ன?

கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு திட்டமானது (EHC திட்டம்) உங்கள் குழந்தையின் சிறப்புக் கல்வித் தேவைகள் (SEN) மற்றும் அவற்றை நிறைவு செய்வதற்காக அவர்கள் பெற வேண்டிய உதவி ஆகியவற்றை விவரிக்கும். ஒரு EHC திட்டத்தில், தேவைப்படும் ஏதேனும் உடல்நல மற்றும் கவனிப்பு வழங்குதலும் உள்ளடங்கும். அதிக ஆதரவு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்குப் பயன்படுத்தப்படும், உள்ளூர் நிர்வாக அமைப்பால் எழுதப்பட்ட ஒரு சட்ட ஆவணமாகும்.

1 செப்டம்பர் 2014 தேதி முதல், சிறப்புக் கல்வித் தேவை அறிக்கைகள் மற்றும் பிரிவு 139-இன் கற்றல் சிரம மதிப்பீடுகள் (LDAs) ஆகியவற்றுக்குப் பதிலாக நடைமுறைக்குவரும்..

EHC திட்டங்கள் என்பவை அதிக அளவிலான ஆதரவு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்கானவை. இந்தத் திட்டங்கள் குழந்தையின் பிறப்பு முதல், கல்வி மற்றும் தொழில்பயிற்சி வரை தொடரலாம்.

## SEND நடைமுறை விதிகள் கூறுவது:

> EHC திட்டத்தின் நோக்கம், குழந்தை அல்லது இளம்பருவத்தினரின் சிறப்புக் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதர்காக சிறப்பு கற்றல் வசதிகளை உருவாக்கி தந்து, அவர்களுடைய கல்வி, உடல்நலம் மற்றும் சமூக கவனிப்பில் சாத்தியமான சிறந்த முன்னேற்றங்களை உறுதிசெய்வதும், அவர்கள் வளரும்போது, பெரியவர்களின் வாழ்க்கை முறைக்கு தயார்செய்வதும் ஆகும். (9.2)

## யாருக்கு EHC திட்டம் தேவைப்படும்?

பள்ளி அல்லது கல்லூரியில் வழக்கமாக கிடைக்கும் ஆதரவு மூலம் பூர்த்தி செய்ய முடியாத சிறப்புக் கல்வித் தேவையுள்ள அல்லது ஊனமுடைய குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்கே EHC திட்டங்கள் தேவைப்படும்.

சிறப்புக் கல்வித் தேவைகள் கொண்ட பெரும்பாலான குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்கு, EHC திட்டத்தின் அவசியமின்றியே உதவிகள் தரப்படும்.

இதுவே SEN ஆதரவு என்றழைக்கப்படுகிறது.

SEN ஆதரவின் நோக்கம், குழந்தைகள் தங்களுக்கு வரையறுக்கப்பட்ட கற்றல் இலக்குகள் அல்லது விளைவுகளை எட்டுவதற்கான உதவியை வழங்குவதே.

இந்த உதவியைப் பெற்ற பிறகும் சில குழந்தைகளும் இளம்பருவத்தினரும் எதிர்பார்க்கப்படும் மேம்பாட்டை அடைவதில்லை. இவ்வாறு நிகழும்போது, உள்ளூர் நிர்வாக அமைப்பு, ஒரு EHC தேவைகள் மதிப்பீட்டை நடத்த வேண்டும். EHC தேவைகள் மதிப்பீட்டைத் தாமதிக்கக் கூடாத அளவுக்கு, சில குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்கு கணிசமான சிரமங்கள் இருக்கலாம்.

உள்ளூர் நிர்வாக அமைப்பிடம், EHC தேவைகள் மதிப்பீட்டைச் செய்யுமாறு நீங்களோ அல்லது உங்கள் குழந்தையின் பள்ளியோ கேட்கலாம். இந்த மதிப்பீடு முடிவடைந்த பிறகு, EHC திட்டத்தை வெளியிடுவதா என்பதை உள்ளூர் நிர்வாக அமைப்பு தீர்மானித்தாக வேண்டும்.

**SEND நடைமுறை விதிகள்** கூறுவது:

ஒரு EHC தேவைகள் மதிப்பீடு தேவையா என்று பரிசீலிக்கும்போது, தொடக்க நிலை கற்பித்தல் தொடங்கும் அமைப்பு, பள்ளி அல்லது 16 வயதுக்குப் பின் படிக்கும் நிறுவனம் போன்றவை குழந்தையின் சிறப்புக் கல்வித் தேவைகளைக் கண்டறிய, மதிப்பிட மற்றும் பூர்த்தி செய்ய தேவையான தொடர்புடைய மற்றும் இலக்குடைய நடவடிக்கைகள் எடுத்த பின்பும் குழந்தை அல்லது இளம் பருவத்தினர் எதிர்பார்த்த மேம்பாட்டை அடையவில்லை என்பதற்கான ஆதாரம் இருக்கிறதா என்பதை உள்ளூர் நிர்வாகம் பரிசீலிக்க வேண்டும். (9.14)

EHC தேவைகள் மதிப்பீடுகள் பற்றிய மேலும் விவரங்களையும், எப்படி அதைக் கோருவது என்பதைப் பற்றியும் கூடுதல் விவரங்களை எங்களுடைய EHC தேவைகள் மதிப்பீடு கைப்பிரதியில் அல்லது பின்வரும் வெஸ்ட் சஸ்ஸெக்ஸின் உள்ளூர் செய்தி இணையதளத்திலும் காணலாம்: westsussex.local-offer.org

சிறப்புக் கல்வித் தேவைகள் அறிக்கையைப் பெற்றுள்ள குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினர் செப்டம்பர் 2014 முதல் ஏப்ரல் 2018 வரையிலான காலத்தில் EHC திட்டத்திற்கு மாற்றப்படுவார்கள்.

## EHC திட்டத்தில் எதுவெல்லாம் அடங்கும்?

**SEND நடைமுறை விதிகளின்படி,** EHC திட்டத்தில் பின்வருமாறு இருக்க வேண்டும்:

- திறந்த மனதுடன், பெற்றோர்கள், குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினர் உடனிருக்கும்போது எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இருக்க வேண்டும்
- குழந்தை அல்லது இளம்பருவத்தினரால் என்ன செய்ய முடியும் என்பதை விளக்க வேண்டும்
- தெளிவாகவும், சுருக்கமாகவும், புரியக் கூடியதாகவும், அணுகக்கூடியதாகவும் இருக்க வேண்டும்
- இலக்குகளை அடைவது குழந்தை அல்லது இளம்பருவத்தினருக்கு எந்த அளவுக்கு சிறப்பாக இருக்கும் என்பதைப் பரிசீலிக்க வேண்டும். EHC தேவைகள் மதிப்பீட்டில் கிடைத்த ஆதாரங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.
- தெளிவான இலக்குகளை வரையறுக்க வேண்டும்
- பெற்றோர் அல்லது இளம்பருவத்தினர் விரும்பினால், ஆதரவை

வழங்குவதற்கான மாற்றுவழிகளைப் பரிசீலிக்க வேண்டும். இதில் தனிப்பட்ட நிதி ஒதுக்கீடு வைத்திருப்பதும் உள்ளடங்கும்

- கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு வசதிகள் எப்படி ஒருங்கிணைப்படும் என்று காண்பிக்கப்பட வேண்டும்
- முன்கூட்டியே சிந்திக்க வேண்டும் – எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தை அல்லது இளம்பருவத்தினரின் வாழ்க்கையில் முக்கியமான மாற்றங்கள் ஏற்படும் கட்டங்களை எதிர்பார்த்து, திட்டமிட்டு மற்றும் செயலாற்ற வேண்டும்
- ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்குகளை அடைவதில் சட்ட அமைப்புகளிடமிருந்து அலுவல் ரீதியாக அல்லாமலும் அலுவல் ரீதியாகவும் பெறப்படும் ஆதரவு எப்படி உதவும் என்று விளக்க வேண்டும்
- மதிப்பாய்வு தேதியைக் கொண்டிருக்க வேண்டும்.

SEND நடைமுறைகள் விதிகள் பிரிவு 9.61-இல் தத்துவங்கள் மற்றும் தேவைகளின் முழுமையான பட்டியல் இருக்கிறது. பின்வரும் வெஸ்ட் சஸ்ஸெக்ஸின் உள்ளூர் செய்திகள் வெளியீட்டு இணையதளத்திலும் இந்த வழிகாட்டுதலுக்கான இணைப்பைக் காணலாம்: westsussex.local-offer.org

ஒவ்வொரு EHC திட்டத்திலும் குறைந்தது 12 பிரிவுகள் கண்டிப்பாக இருக்க வேண்டும், ஆனால் இவற்றை எவ்வாறு அமைப்பது என்பதை உள்ளூர் நிர்வாக அமைப்பு முடிவு செய்யலாம்.

அந்தப் பிரிவுகள் பின்வருமாறு:

**A:** உங்களுடைய மற்றும் உங்கள் குழந்தை அல்லது இளம்பருவத்தினருடைய கருத்துக்கள், ஆர்வங்கள் மற்றும் விருப்பங்கள்.

**B:** உங்கள் குழந்தை அல்லது இளம்பருவத்தினருடைய சிறப்புக் கல்வித் தேவைகள்.

**C:** அவர்களுடைய SEN அல்லது ஊனத்துடன் தொடர்புடைய உடல்நலத் தேவைகள்.

**D:** அவர்களுடைய SEN அல்லது ஊனத்துடன் தொடர்புடைய சமூக கவனிப்பு தேவைகள்.

**E:** உங்கள் குழந்தை அல்லது இளம்பருவத்தினருக்காகத் திட்டமிடப்பட்ட இலக்குகள்.

**F:** சிறப்புக் கல்வி வசதி வழங்குதல். பிரிவு B-இல் சுட்டிக்காட்டப்படும் ஒவ்வொரு தேவைக்கும் ஏற்பாடு செய்யும் வசதியைக் குறிப்பிட்டாக வேண்டும்.

**G:** அவர்களுடைய SEN அல்லது ஏதேனும் ஊனத்துடன் தொடர்புடைய, தேவைப்படக்கூடிய ஏதேனும் உடல்நலம் சார்ந்த வசதி.

**H1:** உங்கள் குழந்தை அல்லது 18 வயதை விடக் குறைந்த இளம்பருவத்தினருக்கு கண்டிப்பாகத் தர வேண்டிய ஏதேனும் சமூக கவனிப்பு.

**H2:** அவர்களுடைய SEN அல்லது ஊனத்துடன் தொடர்புடைய, தேவைப்படக் கூடிய வேறு ஏதேனும் சமூக கவனிப்பு வசதி.

**I:** சேரவேண்டிய பள்ளி, பராமரிக்கப்படும் மழலையர் பள்ளி அல்லது 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான நிறுவனம் அல்லது வேறு நிறுவனத்தின் பெயர் மற்றும் வகை.

**J:** ஏதேனும் தனிப்பட்ட நிதி ஒதுக்கீடு எப்படி குறிப்பிட்ட இலக்குகளுக்கு உதவும் மற்றும் அது பயன்படுத்தப்படவிருக்கும் வசதிகள் ஆகிய விவரங்கள்.

**K:** EHC தேவைகள் மதிப்பீட்டின்போது சேகரிக்கப்பட்ட ஆலோசனை மற்றும் தகவல்

குழந்தை அல்லது இளம்பருவத்தினர் 9ஆம் ஆண்டில் இருக்கிறார்அல்லது அதைக் கடந்து விட்டார் என்றால், பெரியவர்களாகவும் சார்பின்றியும் வாழ்வதற்கு உதவ குழந்தை அல்லது இளம்பருவத்தினருக்குத் தேவைப்படும் வசதியையும் EHC

திட்டத்தில் சேர்த்தாக வேண்டும்.

ஒவ்வொரு பிரிவின் கீழும் என்னவெல்லாம் சேர்க்கப்பட வேண்டும் என்பதன் முழு பட்டியலை, SEND நடைமுறை விதிகள் பிரிவுகள் 9.62 மற்றும் 9.63 ஆகியவற்றில் காணலாம்.

இந்த எல்லா பிரிவுகளையும் விளக்கும் விரிவான ஒரு சரிபார்ப்பு பட்டியலை நீங்கள் பின்வரும் முகவரியில் காணலாம்: http://www.ipsea.org.uk/file-manager/SENlaw/ipsea-ehc-planchecklist-july-2014.pdf

## நான் எப்படி இதில் பங்கேற்பேன்?

**SEND நடைமுறை விதிகள்** கூறுவது:

மதிப்பீட்டு செயல்முறை நடக்கும் போதும், EHC திட்டத்தைத் தயாரிக்கும்போதும் உள்ளூர் நிர்வாக அதிகாரிகள், குழந்தை மற்றும் குழந்தையின் பெற்றோர் அல்லது இளம்பருவத்தினரைத் தொடர்ந்து கலந்தாலோசிக்க வேண்டும். (9.21)

மற்றும்

> மதிப்பாய்வுகள் குழந்தை மற்றும் அவர்களின் பெற்றோருடன் கூட்டாக அல்லது இளம்பருவத்தினருடன் செய்யப்பட வேண்டும், மேலும் அதில் அவர்களுடைய கருத்துக்கள், விருப்பங்கள் மற்றும் உணர்வுகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இதில் அவர்கள் ஒரு தனிப்பட்ட நிதி ஒதுக்கீட்டை கோருவதற்கான உரிமையும் அடங்கும். (9.168)

உங்களுடைய மற்றும் உங்கள் குழந்தையின் கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை. முடிவெடுப்பதில் உங்களையும் பங்கேற்க வைக்க, உள்ளூர் நிர்வாக அமைப்பு, பள்ளி அல்லது கல்லூரி உதவ வேண்டும். இதை செய்வதற்கு நீங்கள் உதவி பெற விரும்பினால், சார்பற்ற ஆலோசனை மற்றும் ஆதரவைப் பெறுவதற்கு West Sussex SEND சார்பற்ற தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவையைத் தொடர்பு கொள்ளவும். நீங்கள் சொல்வதை யாரும் கேட்கவில்லை அல்லது அதைக் கவனத்தில் ஏற்கவில்லை என்று நீங்கள் நினைத்தால், உங்களுக்கு உதவக்கூடிய மற்ற வழிகளைப் பற்றியும் நாங்கள் தகவல்களை வழங்குவோம்.

## EHC திட்டத்தில் ஏதேனும் மாற்றங்கள் இருக்குமா?

குறைந்தது 12 மாதங்களுக்கு ஒருமுறையாவது, உள்ளூர் நிர்வாக அமைப்பு கண்டிப்பாக EHC திட்டத்தை மதிப்பாய்வு செய்ய வேண்டும். இதை நீங்கள் உங்கள் குழந்தை அல்லது இளம்பருவத்தினருடன் இணைந்து செய்ய வேண்டும், மேலும் இதில் உங்களுடைய கருத்துக்கள், விருப்பங்கள் மற்றும் உணர்வுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

திட்டத்தை அப்படியே வைத்திருக்க வேண்டுமா, மாற்றங்கள் செய்ய வேண்டுமா

அல்லது பராமரிப்பதை நிறுத்த வேண்டுமா என்பதை மதிப்பாய்வு சந்திப்பு நடந்த அடுத்த நான்கு வாரங்களுக்குள் தெரிவிக்க வேண்டும். எந்தவொரு நிபுணரின் கருத்தையும் நீங்கள் ஏற்கவில்லை என்றால், மேல்முறையீடு செய்வதற்கான உரிமை உங்களுக்கு உண்டு.

சில இளம்பருவத்தினருக்கு, 25 வயதாகும் வரை EHC திட்டம் தொடரும்.

ஆனாலும், குறிப்பிட்ட நபர் பின்வரும் நிலைகளில் இருந்தால், திட்டம் நிறுத்தப்படும்:

- பல்கலைக்கழகம் செல்கிறார்
- வேலை பெற்றுவிடுகிறார்
- இதன் பிறகு தனக்கு EHC திட்டம் தேவையில்லை என்று உள்ளூர் நிர்வாக அமைப்பிடம் தெரிவிக்கிறார், அல்லது
- அவருக்கு இதன் பிறகு, சிறப்பு உதவி தேவைப்படாது, மேலும் உள்ளூர் நிர்வாக அமைப்பு, EHC திட்டத்தை நிறுத்த முடிவெடுத்து விடுகிறது.

EHC திட்டங்கள் பற்றிய கூடுதல் மதிப்பாய்வுகளை நீங்கள் உள்ளூர் செய்தி வெளியீட்டு இணையதளத்தில் காணலாம்: westsussex.local-offer.org அல்லது West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவுச் சேவையுடன் பேசலாம்

## இதற்கான நிதி உதவிகள் எங்கிருந்து கிடைக்கின்றன?

EHC திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள எல்லா தேவைகளையும் நிறைவேற்றுவதை உறுதிசெய்வது, உள்ளூர் நிர்வாக அமைப்பின் பொறுப்பாகும். EHC திட்டங்களுக்கான நிதி உதவிகள் பல்வேறு ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்றன.

வழக்கமான பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு, நிதியில் ஒரு பகுதி பள்ளியிலிருந்து அளிக்கப்படும். உள்ளூர் நிர்வாக அமைப்பு, தங்களுடைய ‘உச்ச தேவைகள் பிரிவு’ என்பதிலிருந்து அந்த நிதியுதவியுடன் கூடுதலாக சேர்த்து அளிக்கலாம். கூடுதல் விவரங்களை உள்ளூர் நல்கைகளில் காணலாம்.

சிறப்பு பள்ளிகள் ஒவ்வொரு மாணவருக்கும் குறிப்பிட்ட அளவிலான நிதியைச் செலவிடும். தேவையானபோது, இதனுடன் எலிமண்ட் 3 நிதியளிப்பு மூலம் இந்தத் தொகையைக் ‘கூட்டலாம்’.

6வது ஃபார்மில் இடம்பெற்றுள்ள அல்லது கல்லூரிக்கு செல்லும் இளம்பருவத்தினருக்கு, நிதியின் ஒரு பகுதி கல்லூரி நிதி ஒதுக்கீட்டிலிருந்து கிடைக்கும். தேவைப்படும் நிதியளவு ‘தேசிய அளவில் குறிப்பிடப்பட்ட வரம்பை’ விட அதிகமாக இருந்தால், உள்ளூர் நிர்வாக அமைப்பு இந்த அளவுக்கு மேலும் தொகை அளித்துக் ‘கூட்டலாம்’. இது ஒவ்வொரு ஆண்டும் தீர்மானிக்கப்படும் பண அளவாகும். இந்த நிதியளிப்பு தொடர்பான மேலும் விவரங்களை West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை உங்களுக்கு வழங்கக்கூடும்.

EHC திட்டம் கொண்டிருக்கும் எல்லா இளம்பருவத்தினரும், EHC திட்டம் பெற்ற குழந்தைகளின் பெற்றோரும், ஒரு தனிப்பட்ட நிதி ஒதுக்கீட்டை கேட்கலாம். **SEND நடைமுறை விதிகள்** கூறுவது:

> குறிப்பிடப்பட்ட பெற்றோர் அல்லது இளம்பருவத்தினர் வசதியைப் பெறுவதற்காக EHC திட்டத்தில் வரையறுக்கப்பட்ட வசதிகளை வழங்குவதற்காக உள்ளூர் நிர்வாக அமைப்பு, ஒதுக்கும் தொகை தனிப்பட்ட நிதி ஒதுக்கீடு எனப்படுகிறது. (9.95)

தனிப்பட்ட பட்ஜெட்டில் எதையெல்லாம் உள்ளடக்கலாம் என்பதைப் பற்றிய கூடுதல் விஷயங்களை **SEND நடைமுறை விதிகளின்** பிரிவுகள் 9.110 முதல் 9.118

வரை அறிந்து கொள்ளலாம்.

நேரடி கட்டணம் செலுத்தல்கள் உட்பட, தனிப்பட்ட பட்ஜெட்கள் பற்றிய கூடுதல் விவரங்களை West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை தர முடியும்.

## அறிக்கைகள் EHC திட்டங்களாக மாற்றப்படுமா?

அறிக்கையைப் பெற்றுள்ள குழந்தைகளும் இளம்பருவத்தினரும் மெதுவாக புதிய அமைப்புக்கு மாற்றப்படுவார்கள். உள்ளூர் நிர்வாக அமைப்புகள் இந்தச் செயல்முறையை 1ஏப்ரல் 2018க்குள் முடிக்க வேண்டும்.

### SEND நடைமுறை விதிகள் கூறுவது:

> …தற்போதைய அமைப்பின்படி அறிக்கையைக் கொண்டிருப்பவர்கள் மற்றும் தொடர்ந்து அறிக்கையை வைத்திருக்கப் போகிறவர்கள் EHC திட்டத்தின்கீழ் மாற்றப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது – அமைப்பு மாற்றப்படுவதால் மட்டுமே, தங்களுடைய திட்டத்தை இழந்து அது EHC திட்டமாக மாற்றப்படாத நிலை யாருக்கும் ஏற்படக் கூடாது.

ஒவ்வொரு உள்ளூர் நிர்வாக அமைப்பும் ஒரு உள்ளூர் மாற்றுதல் திட்டத்தை வெளியிட வேண்டும், அதில் எப்போது மற்றும் எப்படி அறிக்கைகள் புதிய SEND அமைப்புக்கு மாற்றப்படும் என்பதைக் காண்பிக்க வேண்டும். மேற்படிப்பு மற்றும் தொழில்பயிற்சியில் கற்றலில் சிரமம் தொடர்பான மதிப்பீடு வழியாக ஆதரவைப் பெறும் இளம் வயதினர் தொடர்பான விவரங்களும் இதில் அடங்கும்.

ஏற்கனவே LDA கொண்டுள்ள இளம்பருவத்தினர், ஒரு EHC தேவைகள் மதிப்பீட்டைக் கோரலாம், அப்படி தேவைப்படும் இடங்களில், 1 செப்டம்பர் 2016க்குள் ஒரு EHC திட்டம் வழங்கப்பட்டிருக்கும்.

வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் கவுண்டி கவுன்சிலின் மாற்றுதல் திட்டம் தொடர்பான விவரங்களை உள்ளூர் செய்திகள் இணையதளத்தில் காணலாம்: westsussex.local-offer.org

## EHC திட்டத்தில் எனக்கு திருப்தியில்லை என்றால் என்ன செய்வது?

முதலில் பள்ளி, கல்லூரி அல்லது உள்ளூர் நிர்வாக அமைப்பைத் தொடர்பு கொண்டு உங்கள் கவலைகளைப் பற்றி விவாதிக்கவும்.

West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை உங்களுக்கு ஆலோசனை மற்றும் ஆதரவை வழங்கி, உங்களுக்கு இருக்கும் விருப்பத்தேர்வுகளை விவரிக்கும். இதில் நடுவர் உதவி நாடல் அல்லது மேல்முறையீடு செய்தலும் அடங்கலாம். மேலும் விவரங்களை westsussex.local-offer.org-இல் அறியலாம்.

## மற்றொரு உள்ளூர் நிர்வாக அமைப்புக்கு இடம்பெயர்ந்தால் என்ன நடக்கும்?

மற்றொரு நிர்வாக அமைப்புக்கு இடம்பெயர முடிவெடுத்தல், உங்களுடைய ‘பழைய’ மற்றும் ‘புதிய’ உள்ளூர் நிர்வாக அமைப்புகளைத் தொடர்பு கொள்ள வேண்டும், இதன் மூலம் EHC திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆதரவுகள் தொடர்ந்து கிடைக்க வழி செய்யப்படும். ‘புதிய’ நிர்வாக அமைப்பு திட்டத்தில் சேர்க்கப்பட்டு, புதிய பள்ளி அல்லது கல்லூரியைக் குறிப்பிடுவார்கள்.

15 வேலைநாட்கள் முன்கூட்டிய அறிவிப்பைப் பெற்றிருந்தால், ‘பழைய’ உள்ளூர் நிர்வாகம், EHC திட்டத்தை, இடம்பெயரும் நாள் அன்று கண்டிப்பாக மாற்றி தர வேண்டும்.

## ஆலோசனை அல்லது ஆதரவைப் பற்றி மேலும் விவரங்களை நான் எங்கே பெறலாம்?

SEND நடைமுறை விதிகளின் பகுதி 9-இல் கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு

திட்டங்களைப் பற்றி மேலும் அறியலாம்.

EHC திட்டங்கள் உட்பட, சிறப்புக் கல்வித் வசதிகளுக்காக உள்ளூரில் செய்யப்பட்ட ஏற்பாடுகளை உள்ளூர் செய்தியில் அறியலாம்.

West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை பின்வருவனவற்றை வழங்குகிறது:

- EHC EHC தேவைகள் மதிப்பீட்டில் நீங்கள் பங்கேற்பதற்கு உதவுவதற்காகவும் செயல்முறையைப் புரிந்து கொள்ளவும் தேவையான தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு
- EHC திட்டங்கள் பற்றிய ஆலோசனை மற்றும் ஆதரவு
- EHC திட்டங்களின் மதிப்பாய்வுகளில் கலந்து கொள்வதற்கு தேவையான தகவல்கள், ஆலோசனை மற்றும் ஆதரவு
- உங்கள் குழந்தைக்காக உருவாக்கப்பட்ட SEND க்கான நிதியளிப்பு மற்றும் வசதிகளைப் பற்றி மேலும் விவரங்களை அறிவதற்கான உதவி
- உங்கள் குழந்தை கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு திட்டத்தைப் பெற்றிருந்தால், தனிப்பட்ட நிதி ஒதுக்கீடு பற்றிய தகவல்கள், ஆலோசனை மற்றும் ஆதரவு
- உதவக் கூடிய மற்ற நிறுவனங்கள், ஆதரவுக் குழுக்கள் மற்றும் தகவல் சேவைகள் பற்றிய தகவல்கள்.
- புகார்களை அளிப்பது, சார்பற்ற ஒப்புதலின்மை தீர்வு பெறுவது அல்லது நடுவர் உதவி நாடல் மற்றும் SEND டிரிப்யூனலுக்கு மேல்முறையீடு செய்வது போன்றவற்றுக்காக உங்களுக்கு உள்ள உரிமைகள் பற்றிய தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு.

# எங்களைத் தொடர்பு கொள்ள


### உதவி எண்:

0330 222 8555

### அஞ்சல் முகவரி

SEND Information, Advice and Support Service

St James

Campus St

James Road

Chichester

West Sussex

PO19 7HA

### மின்னஞ்சல் முகவரி:

send.ias@westsussex.gov.uk


### எங்கள் இணையதளங்களையும் நீங்கள் பார்க்கலாம்:

https://westsussex.local-offer.org/services/7

**SEND** = சிறப்புக் கல்வித் தேவைகள் மற்றும் உடல்குறைபாடு (Special Educational Needs and Disabilities)

எல்லா பெற்றோருக்கும் பாகுபாடற்ற தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் ஆதரவு சென்று சேர்வதை உறுதிப்படுத்துவதே WS SEND IAS இன் பங்காகும், இதன் மூலம் பெற்றோர், தங்கள் குழந்தையின் சிறப்புக் கல்வித் தேவைகளைப் பற்றிய தகவல் அறிந்த முடிவுகளை எடுக்க முடியும். பாதிப்பு உடைய குடும்பங்களுக்கு அவர்களுடைய சூழல்களில் உதவக்கூடிய தனிநபர்கள், சேவைகள் அல்லது ஏஜென்சிகளுடன் பகிர்ந்து கொள்வதற்கான அனுமதி பெறப்பட்டால் தவிர WS SEND IAS உடன் பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்கள் ரகசியமாகவே வைக்கப்படும்.

west sussex county council

www.westsussex.gov.uk

WS1037 09.16

TAMIL